செ.வெ. எண்: 114 நாள்: 06.02.2012

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், திருமதி. பா.வளர்மதி, அவர்கள் இன்று 06.2.2012 (திங்கட்கிழமை) காலை 12.00 மணி அளவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை சிந்தாதரிப்பேட்டை, அருணாச்சலத்தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளி வளாகத்தில் இயங்கும் 2 அங்கன்வாடி மையங்களை திடிரென ஆய்வு செய்தார்கள். ஆய்வின் பொழுது சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அரசு செயலாளர் திரு. கே.கோபால்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சமூகநல இயக்குநர் திருமதி. ஜோதி நிர்மலா, இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தார்.

இவ்வாய்வில் அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் தினசரி காலை உணவு மற்றும் மதிய உணவு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகளிடம் கேட்டுக் அறிந்தார்கள். அரிசியின் தரம் குறித்து ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தரமான அரிசியை குழந்தைகளுக்கு வழங்கவேண்டும் என்றும், மேலும் சுகாதாரமான முறையில் சமையல் செய்து அதை விநியோகித்திட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்கள். குழந்தைகளுக்கு கல்வி செல்வத்தை போதிப்பதோடு, எதிர்காலத்தில் அவர்களின் செயல்பாடுகள் உறுதியாக அமையும் வண்ணம் விளையாட்டுகளிலும் ஈடுபடுத்தி அவர்களின் செயல்திறனை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு முறையை குறித்து மையத்தில் தினசரி கால அட்டவணையை பார்வையிட்ட அமைச்சர் அவர்கள் அவ்வட்டவணைப்படி உணவுகள் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

மேலும், சமூகபாதுகாப்புத் துறையின் கீழ் சென்னை கெல்லிஸ் பகுதியில் செயல்படும் அரசினர் கூர்நோக்கு இல்லத்தையும், அரசினர் சிறுமியர் இல்லத்தையும் ஆய்வு செய்தனர். இல்லத்தில் தங்கியுள்ள சிறார்கள், இல்லத்தில் அளிக்கப்படும் பயிற்சிகளை நல்ல முறையில் பயிற்சிப் பெற்று, திறமையை வளர்த்துக்கொண்டு, வாழ்க்கையில் தவறான பாதைக்கு செல்லாமல் சுயமாக தொழில் தொடங்கவும் சமுதாயத்தில் மற்றவர்போல் தங்களை இணைத்துக் கொள்ளவும் அறிவுரை வழங்கினார். அச்சிறார்கள் தீட்டிய ஓவ்வியங்களை பார்த்து வெகுவாக பாராட்டி வாழ்த்துகள் தெரிவித்துக்கொண்டார்.

இவ்வாய்வின்போது சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அரசு செயலாளர் திரு. கே.கோபால்,இ.ஆ.ப., அவர்கள், சமூகபாதுகாப்பு துறை இயக்குநர் திரு. அசோக்டோங்ரா, இ.ஆ.ப ஆகியோர் உடன் இருந்தார்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**